**த**மிழில் ஓரினச் சேர்க்கை என்பது ஆங்கிலத்தில் Homo sexuality எனப்படுகிறது. கிரேக்க மொழியில் 'Homo' என்றால் ஒரே மாதிரி யானவை என்று அர்த்தம். 'ஹோமோ செக்ஸ்' என்ற பெயரை முதன்முதலில் 1869-ல் ஜெர்மன் உளவியல் நிபுணர் 'கார்ல் மரியா பென் கெர்ட்' என்பவர்தான் பயன்படுத்தினார். அதற்கு முன் பல பெயர்களில் ஓரினச் சேர்க்கை அழைக்கப்பட்டது.

பொதுவாக ஓரினச் சேர்க்கை என்று சொல்லப் பட்டாலும் ஆணும் ஆணும் கூடுவதற்கு 'ஹோமோ செக்ஸுவாலிட்டி' என்று பெயர். அதுவே பெண்ணும் பெண்ணும் கூடினால 'லெஸ்பியன்' (lesbian) என்று குறிப்பிடப்படுகிறது.

'லெஸ்பியன்' என்ற வார்த்தை எதிலிருந்து வந்தது? கி.மு. 7-ம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் 'ஸாப்போ' என்ற கவிஞர் 'லெஸ்போஸ்' (Lesbos) எனும் தீவில் வசித்து வந்தார். இந்தத் தீவில் ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்து 'ஒரு பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவளே... ' என்று பாடுவது சகஜம். ஆம், பெண்ணும் பெண்ணும் கூடி வாழ்வது இங்கு சகஜமாக இருந்தது. பெண்களின் இந்தக் கூடல் சங்கமத்தை, ஸாப்போவின் பேனா தித்திப்பாக வர்ணித்து எழுத, உலகம் முழுவதும் பிரபலமாகிப் போனது லெஸ்போஸ் தீவு. இதனால் பெண்ணும் பெண்ணும் இணை சேர்வதற்கு 'லெஸ்பியன்' என்ற பெயர் வந்தது.

மனிதன் தோன்றி வளர்ந்த ஆதி நாளிலிருந்தே ஓரினச் சேர்க்கையும் மனித சமூகத்தில் இருந்து வந்திருக்கிறது. கிரேக்க தத்துவ ஞானி 'பிளாட்டோ' தன்னுடைய 'symposium' எனும் நூலில், 'ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள்தான் சிறந்த போர்வீரர்களாக முடியும்' என்று எழுதியுள்ளார். கிரேக்கப் புராணத்தில் பல கடவுள்களும் ஹீரோக்களும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


டாக்டர்
நாராயண ரெட்டி

அந்நிய தேசத்தின் மீது படையெடுக்கும் எகிப்திய போர் வீரர்கள், தங்களிடம் தோற்கும் அயல் நாட்டு வீரர்களுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது, அந்நாட்களில் மிக மிக சாதாரண விஷயமாக இருந்திருக்கிறது.

கிறிஸ்து பிறப்புக்கு முன்பு வரை ரோம் நாட்டில் ஓரினச் சேர்க்கையை சமுதாயம் தவறாக நினைக்க வில்லை. இந்த உறவுக்கு சமூக அங்கீகாரம் மட்டுமில்லை... சட்டரீதியான அங்கீகாரம்கூட தரப்பட்டிருந்தது. ரோமானிய மன்னர்களான நீரோ, கலிகுலா போன்றவர்கள் ஓரினச் சேர்க்கையை ஆதரித்ததுடன் அதில் லயிப்புடன் ஈடுபட்டும் வந்திருக்கிறார்கள்.

ஆனால், கிறிஸ்து பிறப்புக்குப் பின்னர் நான்காம் நூற்றாண்டில் ஓரினச் சேர்க்கை மீதான சமுதாயத்தின் கருத்தில் மிகுந்த மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. குறிப்பாக, ஆசனவாய் வழியாக செக்ஸில் ஈடுபடக் கூடாது என்ற எண்ணம் வலுப் பெற்றது. 'ஆசன வாய் வழியே செக்ஸில் ஈடுபட்டு சந்ததியை உருவாக்கும் வாய்ப்பு இல்லாதபோது ஏன் அதில் ஈடுபட வேண்டும்?' என்ற எண்ணம் வலுவடைய ஆரம்பித்தது. காலக் கழிவில் கிறிஸ்தவ மதம் தோன்றி அது உலகெங்கும் பரவ ஆரம்பித்த காலத்தில், 'ஹோமொ செக்ஸ்' குறித்த எதிர்மறையான கருத்துகள் கிளம்ப ஆரம்பித்தன.

அதேசமயம், மறுமலர்ச்சி காலத்தில் மாபெரும் சிற்பியும் ஓவியனுமான மைக்கேல் ஏஞ்சலோவும் இன்னும் சில ஓவியர்களும் புகழ்பெற்ற 'சிஸ்டைன் சேப்பல்' (Sistine chapel) தேவாலயத்தின் நீண்ட சுவர்களில் ஆடையில்லாத ஆண்களையும், ஆண் உறுப்புகளையுமே வரைந்து ஓரினச் சேர்க்கைப் பற்றிய தங்களின் ஆதரவை மறைமுகமாகத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர்கூட தனது புகழ்பெற்ற கவிதைகளில், நாடகங்களில் ஆணின் உறுப்புகளை அழகாக வர்ணித்து எழுதியிருப்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டித்தான் ஆக வேண்டும்.

'ஜான் பாஸ்வெல்' என்ற வரலாற்று ஆசிரியர், 'கிறிஸ்டியானிட்டி சோஷியல் டாலரன்ஸ் அண்ட் ஹோமோ செக்ஸுவாலிட்டி' என்ற நூலை எழுதினார். இதில் 'கிறிஸ்தவ மதம் ஆரம்பத்தில் ஹோமோ செக்ஸை எதிர்க்கவில்லை, ஏற்றுக் கொண்டுதான் இருந்தது' என்று குறிப்பிட்டுள்ளார்.

செயின்ட் அகஸ்டின், செயின்ட் தாமஸ் ஆக்வீனாஸ் என்ற இரண்டு மத குருமார்கள், 'எந்த விதமான செக்ஸ் செயல் பாட்டில் ஈடுபட்டால் குழந்தை பிறக்கிறதோ அதுதான் சமுதாயத்துக்கு நல்லது. அதுதான் இயற்கை யானதும்கூட. இதற்கு மாறாக குழந்தை பிறக்க எந்தவித வாய்ப்புமில்லாத நிலையில் செக்ஸில் ஈடுபடுவது பாவம். அது இயற்கைக்குப் புறம்பானது' என்று குறிப்பிட்டார்கள்.




அப்போது சமூகத்தில் செல்வாக்கு மிக்க ஆசாமிகளாக இருந்தவர்கள், இந்த மத குருக்களின் கருத்துகளை ஏற்றுக் கொண்டதுடன் அவற்றைத் தங்களுக்கு சாதகமாகவும் பயன் படுத்திக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். தங்களை எதிர்ப்பவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தாலும்கூட அவர்கள் மீது ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார்கள் என்ற முத்திரையைக் குத்தி அவர்களுக்கு அபராதம் விதிப்பது, சிறையிலடைப்பது, துன்புறுத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக அக்கால கட்டத்தில் ஓரினச் சேர்க்கை என்பது வெறுப்புக்குரிய கீழ்த்தரமான செயலாக மக்கள் மத்தியில் பதிந்து போனது.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது பாவம், மாபெரும் தவறு என்ற மதரீதியான பார்வைக்கு அழுத்தம் சேர்ப்பதுபோல், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மருத்துவ

உலகமும் ஓரினச் சேர்க்கை தவறானது என்று சொன்னதுடன், இதுவொரு நோய் என்றும் சொல்லத் துவங்கியது. உதாரணமாக, 'கிராஃப்ட் எபிங்' என்னும் செக்ஸூவாலஜிஸ்ட் 1886-ல், மருத்துவ பாடநூல் ஒன்றை எழுதினார். இதில் 'ஓரினச் சேர்க்கை என்பது பிறவிக் கோளாறு (ஜீன் குறைபாடு) என்றும், இத்தகைய புணர்ச்சியில் ஈடுபடுவது நரம்புத் தளர்ச்சிக்கு வழிகோலும் என்றும் எழுதியிருந்தார். அப்போது, இவரது கருத்தை ஒட்டி மருத்துவ உலகம் ஓரினச் சேர்க்கையை ஒரு மனநோயாகவே கருதியது.

ஹோமோ செக்ஸ் தவறா, இல்லையா என்பது பல காலமாக நீண்டவிவாதமாக இருக்க, ஃபிரான்ஸ் சக்கரவர்த்தியாக ஐரோப்பியாவை ஆட்டி வைத்துக் கொண்டிருந்த நெப்போலியன், 1804-ல் வயதுக்கு வந்த இருவர் விருப்பத்துடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது தவறில்லை என்று சட்டம் போட்டான். இதுதான் சரித்திரத்தில் முதல் சட்டம்!

## இது வித்தியாசமான (U) சர்டிஃபிகேட் தொடர்!

அடுத்தகட்டம், 1957-ல் இங்கிலாந்தில் ஒரு கமிட்டி போடப்பட்டது. இந்த கமிட்டி ஓரினச் சேர்க்கையைப் பற்றி கள ஆய்வு செய்து, ஒரு அறிக்கையைத் தயாரித்தது. இதற்கு 'வுல்ஃபென்டன் ரிப்போர்ட்' என்று பெயர். இந்த அறிக்கையில், 'வயதுக்கு வந்த இரண்டு பேர் எந்தவிதமான செக்ஸ் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் தவறே கிடையாது. விருப்பமின்றி எந்தவிதமான செக்ஸ் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அது தவறே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை எந்த வகையான செக்ஸ் உறவு என்பதைவிட விருப்பத்துக்கே முதலிடமும் முக்கியத்துவமும் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பல எழுத்தாளர்களுக்கு, கவிஞர்களுக்கு, இசைக் கலைஞர்களுக்கு, ஓவியர் களுக்கு ஓரினச் சேர்க்கையைப் பற்றி நல்ல எண்ணம் இருந்திருக்கிறது. என்றாலும், தங்களின் ஆதரவுக் கருத்தை நேரடியாக மக்கள் மன்றத்தில் சொல்லாமல், மறைமுகமாகவே வெளிகாட்டி வந்தனர். வெளிப்படையாகச் சொன்னால் சமுதாயம் தங்களை இழிவாகக் கருதி விடுமோ என்ற அச்சமும், அதுவரை தாங்கள் பாடுபட்டு தேடி வைத்திருக்கும் புகழுக்குப் பங்கம் வந்துவிடுமோ என்ற தயக்கமும் அவர்களுக்கு இருந்திருக்கலாம்.

1969-ல் அமெரிக்காவில் மான்ஹாட்டன் நகரத்தில் ஓரினச் சேர்க்கைக்கு என்றே ஒரு கேளிக்கை விடுதி இருந்தது. இந்த விடுதியில் போலீஸ்காரர்கள் திடீரென்று ஒரு நாள் ரெய்டு நடத்தி அங்கிருந்தவர்களை எல்லாம் கைது செய்தார்கள். இந்த ரெய்டை எதிர்த்து ஹோமோ செக்ஸ் விரும்பிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வீதிகளில் தெருமுனைக் கூட்டம் போட்டு 'ஓரினச் சேர்க்கையை தவறாக

நினைக்காதீர்கள்' என்று கோஷம் போட்டார்கள். இந்த நிகழ்ச்சி அமெரிக்காவில் அப்போது மிகுந்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிகழ்ச்சி மிக மிக முக்கியமானதாகக் கருதப்பட காரணம் உள்ளது. அது நாள் வரை ஓரினச் சேர்க்கைக்கு மறைமுகமாக ஆதரவு தந்த ஓரினச் சேர்க்கையாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, வீதிக்கு வந்து பகிரங்கமாகப் போராட வைத்தது இச்சம்பவம். ஓரினச் சேர்க்கைக்கு எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்று வெளிப்படையாக மக்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. அதோடு ஓரினச் சேர்க்கை குறித்த அமெரிக்க அரசின் கருத்தையே மறுபரிசீலனை செய்ய வைத்தது!

1979-ல், ‘ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவர்களை சமூகம் ஒதுக்கக் கூடாது. மற்றவர்களைப் போல் இவர்களும் சமமானவர்களே' என்று முப்பத்தொன்பது அமெரிக்க நகரங்களில் அரசாங்கமே சட்டம் கொண்டு வந்தது. இது ஓரினச் சேர்க்கை சம்பந்தப்பட்ட விவாத வரலாற்றில் ஒரு திருப்பு முனை!

மனித உயிர்களிடத்தில் காணப்படும் இந்த ஹோமோசெக்ஸ் பற்றிய பார்வை இந்தியாவில் எப்படி இருந்தது?

(உயிர் வளரும்...)